தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - ஒஸ்ரேலியா
Tamils Rehabilitation Organisation - Australia
P O Box 4254, Knox City, Victoria 3152, Australia
Phone / Fax: + 61 3 9888 3899

Australian Council For International Development

# ஒஸ்ரேலியா தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நத்தார் வேண்டுதல்

*" மீள்குடியேற்றப்பட்டிருக்கும் பெண்கள் தலைமையிலான குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டம் "*

விக்ரோரிய ஈழத்தமிழ் சங்கம் நடாத்தும், 3CR (855AM) தமிழ்க்குரல் வானொலியூடாகவும், 24 மணிநேர இன்பத்தமிழ் ஒலி வானொலியூடாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வட கிழக்கில் பணியாற்றும் சமூகத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் ***'மீள்குடியேற்றப் பட்டிருக்கும் பெண்கள் தலைமையிலான குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டத்திற்காக'*** நடைபெறும் நத்தார் வேண்டுதல், ரேடியோதொன் நிதிசேகரிப்பு நிகழ்ச்சி, எதிர்வரும் **December** மாதம் **25**ம் திகதி கிறிஸ்மஸ் தினமன்று, காலை **9** மணி முதல் மாலை **6.30** மணி வரை, 23 வது ஆண்டாக நடைபெற உள்ளது.

ஈழத்தில், நடந்துமுடிந்த பயங்கர யுத்த அனர்த்தங்களினாலும், இயற்கை ஆழிவுகளினாலும் பாதிக்கப்பட்டு, இலங்கையின் வட-கிழக்கு மாகாணத்தில் மிகமோசமாக மன அழுத்தங் களினால் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படும் எங்கள் எதிர்கால சந்ததி, பெண்கள், வயோதிபர்களின் அவலத்தைப் போக்கவும், அவர்களின் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்து, அந்த தமிழ் உறவுகளின் வளமான வாழ்வுக்கு வழிசமைக்கும் நோக்கோடு **TRO Australia** வினால், அங்குள்ள சமூகத்தொண்டு நிறுவனங்களின் உதவி ஒத்தாசையுடன் மேற்கொள்ளப்படும் "***மீள்குடியேற்றப்பட்டிருக்கும் பெண்களுக்கான வாழ்வாதார உதவித் திட்டத்திற்கு***" ஆதரவாக **3CR தமிழ்க்குரல் வானொலியிலும், 24 மணிநேர இன்பத்தமிழ் ஒலி வானொலியிலும்** நடைபெறும் கிறிஸ்மஸ் ரேடியோதொனில், மெல்பேர்னின் சகோதர தமிழ் சமூகவானொலிச் சேவைகளின் பிரபல அறிவிப்பாளர்களும், இளையவர்களும் இவ் உன்னதப் பணியில் இணைந்து கொள்கின்றனர்.

25ம் திகதி காலை 9 மணி முதல் மாலை 6.30 மணி வரை உள்ள வானொலி ஒலிபரப்பு நேரத்தில், உங்கள் நன்கொடைகளை வழங்கத் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி **இலக்கங்கள் <u>1300 721 399</u>** அல்லது **<u>(03) 9419 8377</u>.** விடுமுறையில் செல்வோர், முன்கூட்டியே நன்கொடைகளை வழங்க இருப்போர் மற்றும் வானொலி ஒலிபரப்பு நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் உங்களது நன்கொடைகளை தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகத்தை (03) 9888 3899 இல் தொடர்பு கொண்டோ அல்லது அஞ்சல் முகவரி **T.R.O Australia, P.O.Box 4254, Knox City, Vic 3152** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**விறுவிறுப்பான இந்த 10 மணி நேரத்தில் <u>1300 721 399</u> அல்லது <u>(03) 9419 8377</u> என்ற தொலைபேசி இலக்கங்களில் உன்னதமான இந்த நாளில் தொடர்பு கொண்டு, ஈழத்திலே அன்று முதல் இன்று வரை முன்னணியில் நின்று எமது மக்களுக்கு அயராது என்றும் உதவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் "மீள்குடியேற்றப்பட்டிருக்கும் பெண்களுக்கான வாழ்வாதார உதவி" எனும் திட்டத்திற்கு ஆதரவு கொடுக்கத் தவறாதீர்கள் !!!!**